இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 10 | திகதி : 11.08.2024 | விலை : 50.00

## மக்களுக்குப் பணிபுரிபவர்களாக அரசியல் தலைவர்கள் செயற்பட இறைவேண்டல் செய்வோம்

– திருத்தந்தை பிரான்சிஸ்



தங்களுடைய மக்களுக்குப் பணிபுரிபவர்களாக அரசியல் தலைவர்கள் செயற்படவேண்டும். என்பதற்காக இறைவேண்டல் செய்வோம் என ஆகஸ்ட் மாதத்திற்கான செபக்கருத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்அழைப்புவிடுத்துள்ளார். புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் வார்த்தைகளான. **'அரசியல் என்பது பிறரன்பின் மிக உயரிய வடிவங்களுள் ஒன்று. ஏனெனில் அது பொது நலனுக்காக உழைக்கிறது'** என்பதை மேற்கோள் காட்டியுள்ளதிருத்தந்தை வேலை வாய்ப்புகளை இழந்தவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி. ஏழைகளுக்கான பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து. பொது நலனுக்காகவும். மக்களின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்காகவும் அரசியல் தலைவர்கள் பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

### யாழ்.ஆயர் - ஜனாதிபதி சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் 02ம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை. இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வசாவிளான் பிரதேச விடுவிப்பு. இந்தியாவிற்கான Indigo விமான சேவையை ஆரம்பித்தல். இலங்கை இந்தியாவிற்கான கப்பல் சேவையை ஆரம்பித்தல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பில் வட மாகாண ஆளுநர் திருமதி. சாள்ஸ். முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன். முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலய குவிமாட திறப்பு விழா





செம்பியன்பற்றின் பாதுகாவலராம் புனித பிலிப்புநேரியாரின் ஆலய தூயகக் குவிமாடம் (Dome) திறப்பு விழாவும் பலிப்பீட ஆசீர்வாதமும் கடந்த 7 ஆம் திகதி யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி S. டியூக் வின்சன்ற் அடிகளாரின் அயராத உழைப்பிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்கு மக்களின் தாராளப் பங்களிப்பிலும் இவ்வாலயத்தின் முதற்கட்டம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மறைக்கோட்ட முதல்வர்களுக்கான பிரியாவிடை - வரவேற்பு நிகழ்வு



பருத்தித்துறை மறை ப்பங்கில் கடந்த நான்கரை வருட காலமாக பங்குத்தந்தை யாகவும் மறைக்கோட்ட முதல்வராகவும் இறைபணியாற்றி மாற்றலாகிச் செல்லும் அருட்பணி பெனட் அடிகளாரின் பிரியாவிடை நிகழ்வும். புதிதாக பொறுப்பேற்ற அருட்பணி கிருபாகரன் அடிகளாரை வரவேற்கும் நிகழ்வும் கடந்த 30ஆம் திகதி யாழ் மறைமாவட்ட குருமுதல்வரின் தலைமையில் இடம் பெற்றது.

### சின்ன மடு புனித செபமாலை அன்னையின் திருவிழா



யாத்திரைத் தலமான சின்ன மடு புனித செபமாலை அன்னையின் திருவிழா திருப்பலி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நற்கருணை விழா திருப்பலி யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்னம் அடிகளாரினால் நிறைவேற்றப்பட்டதுடன் நற்கருணை ஆராதனைவழிபாடு யாழ். அருட்தந்தை ரவிராஜ் அடிகளாரினால் சிறப்பாக நிறைவேற்றப்படடது.

முல்முறையாக நற்கருணைப்பவனியும். சின்னமடு மாதாவின் திருப்பவனியும் தேர்ப்பவனியாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தேரை யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை பங்கைச் சேர்ந்த ஓர் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

### இந்திய-பிலிப்பைன்ஸ் திருக்குடும்ப அருட்சகோதரிகள் ஆயரை சந்தித்தனர்



இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் பேர்டோவின் திருக்குடும்ப கன்னியர் சபைச் சகோதரிகளின் பிரதிநிதிகள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு கடந்த 01 ம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

### 'களம் தந்த களங்கம்' குருநகர் பங்கில் தென்மோடிக்கூத்து



புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழாவை சிறப்பித்து குருநகர் பங்கில் முன்னெடுக்கப்பட்ட 'களம் தந்த களங்கம்' புனித யாகப்பரின் புதுமைகளை உள்ளடக்கிய அவரின் வாழ்கை வரலாற்றை சித்தரிக்கும் தென்மோடிக்கூத்து கடந்த 29ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் தயாரிப்பில் திரு கிளமென்ட் நெல்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் தலைமையில் குருநகர் கலையரங்கில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வின் ஆரம்பத்தில் குருநகர் பங்கை சேர்ந்த அருட்தந்தையர்களுக்கான கௌரவிப்பும். கலைஞர்களான கலையார்வன் குருசுமுத்து இராயப்பு திரு. கலைஞானச்செல்வன் அரியநாயகம் அன்று யூலியஸ் ஆகியோருக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன. 'களம் தந்த களங்கம்' தென்மோடிக்கூத்து திரு. கலையார்வன் இராயப்பு அவர்களால் எழுதப்பட்டு திரு. அன்று யூலியஸ் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டு குருநகர் கலைஞர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டு பலரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## பணிவிடை பெற அன்று; பணிவிடை புரியவே...

எமது தேசத்தில் தற்போது சூடுபிடித்திருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் களம் மக்கள் மத்தியில் பிரதானமானதொரு பேசுபொருளாக மாறி வருகின்றது. அரசியல் தலைமைத்துவம் என்பது சர்வதேச ரீதியில் அனைவராலும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் முதன்மை விடயமாகும். தற்கால இலங்கையின் அரசியல், சமூகப் பொருளாதார பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தல் என்பது பொருளாதார ரீதியாக எமது நாட்டின் எதிர்கால இருப்பையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் நிலை நிறுத்துமா அல்லது நிலைகுலைக்குமா எனப் பலரும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர்.

இவ்வேளையில் தான் எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகில் நல்ல அரசியல் தலைவர்கள் உருவாகவும், உலகை ஆட்சி செய்யவும், மக்களுக்குப் பணிபுரிபவர்களாக செயற்படவும் இறைவனிடம் உருக்கமாக வேண்டுதல் செய்ய அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். திருத்தந்தை அவர்கள் பொதுவாக இந்த அழைப்பினை விடுத்தாலும் நமது தேசத்தின் இன்றைய அரசியல் சூழலுக்கு இவ்வழைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

தலைமைத்துவம் என்பது கிறிஸ்து இயேசுவின் பார்வையில் ஆழமான அர்த்தம் பெறுகின்றது. "உங்களில் தலைவன் பணிவிடைக்காரனாக இருக்க வேண்டும்" எனக் கூறிய இயேசு தலைவனுக்குரித்தான "பணிவிடை பெற அன்று: பணிவிடை புரியவே வந்தேன்" என திருவாய் மலர்ந்து, "தலைமைத்துவம் என்பது பிறருக்குச் சேவை செய்வதே" என்பதை ஆணித்தரமாக அறைந்தார். இந்நிலையில் அரசியல் தலைமைத்துவம் மட்டுமன்று அனைத்து வகையான தலைமைத்துவங்களும் மக்களின் நலன்கருதி அவர்களுக்குச் சேவை யாற்றுவதையே தமது முதன்மையானதும் முழுமையானதுமான நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

தலைசிறந்த தலைவருக்கான பண்புகளாக தன்னடக்கம், தூரநோக்கு, தீர்க்கமான உறுதியான முடிவு, சொல்வதைச் செய்வது, செய்ததை மட்டும் சொல்வது, வழிப்படுத்தும் ஆற்றல், ஆளுமை, நடுவுநிலைமை, நீதிநியாயம், பிறரைத் துன்பத்தில் ஆழ்த்தாமை, பொறுப்புக் கூறல், ஏற்றுக்கொள்ளுதல், கருணை, செவிமடுத்தல் எனப் பல வகைப்பட்ட பண்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நமது தேசத்தின் அரச தலைமைத்துவங்களை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை சந்தித்து வருகின்றோம். பல்வேறு வகையான கொள்கைகளுடனும், நடைமுறைகளுடனும், செயற்பாடுகளுடனும், தீர்க்கதரிசனமான - தீர்க்கதரிசனமற்ற பார்வைகளுடனும் அரியாசனம் ஏறிய தலைவர்களை நாம் சந்தித்திருக்கின்றோம். அவர்களின் செயற்பாடுகளை அவதானித்திருக்கின்றோம். அச்செயற்பாடுகளால் விளைந்த நன்மை - தீமைகளை அனுபவித்திருக்கின்றோம். அனுபவித்தும் வருகின்றோம். இவ்வகையில் சிறந்த தலைமைத்துவம் எவ்வாறு அமையவேண்டும் என்ற விருப்பும், ஆதங்கமும் அனைவர் மனங்களிலும் நிழலாடவே செய்யும்.

சுதந்திரத்தின் பின் மந்திரி சபை அரசாங்கமாக பிரதமர்கள் தலைமையில் ஆரம்பித்த நமது தாய்த்திருநாடு 1978ம் ஆண்டின் பின்னர் ஜனாதிபதித்துவ அரசாங்க முறைக்கு மாற்றம் பெற்று, பல ஜனாதிபதிகளை அரச தலைவர்களாகக் கண்டுகொண்டது.

தேசியவாதம், இனவாதம், மதவாதம், பிரிவினைவாதம் எனப் பல்வேறு கருத்தியல்களுக்கூடாக நகர்ந்து வரும் இலங்கையின் அரசியல் நீரோட்டம் தற்போது பொருளாதாரப் பின்னடைவு என்னும் தடை காரணமாக தேங்கி நின்று தற்போது மெல்லெனப் பாயத் தொடங்கியுள்ளது. பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் ஒருபுறம் அரசாங்கமும், மறுபுறம் மக்களும் திண்டாடி வந்தமை, வருகின்றமை கசப்பான உண்மையாகும். இச்சூழ்நிலையில் உதவிக் கரம் நீட்டியவர்களும், நிபந்தனைகளுடன் உதவிக்கரம் நீட்டியவர்களும் நன்றிக்குரியவர்கள். எனினும் நாடு தலை நிமிரவில்லை என்பதே நிதர்சனமாகும்.

இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையிலேதான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுதி செய்யப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்களும், மாற்றமுற்று - மாற்றம் பெற்று வருகின்ற ஜனாதிபதி வேட்பாளர்களுமாக தேர்தல் மேடை அலங்கரிக்கப்படுகிறது. தலைமைதாங்க விளைபவர்கள் ஆடம்பர பொருட்க ளாக மாறாது உண்மையான அரசியல் தலைவர்களாக மக்கள் முன் நிற்கவேண்டும். மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை வடிவமைப்பதற்குரிய வடிகால்களுக்கு வழிசமைக்கும், தூர நோக்குடன் மற்றும் இதய சுத்தியுடன் செயற்படக்கூடிய நல்லவராகவும், வல்லவராகவும் மக்களுக்கு சேவை செய்யும் தலைவன் ஆட்சிப்பீடம் அமர வேண்டுமென மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர். ஆசியாவின் அதிசயமாக எமது தேசத்தை மாற்றாவிட்டாலும் சாபக்கேடாக மாற்றாதிருக்க தலைமைத்துவம் தலைநிமிரவேண்டும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# கிளரீசியன் சபையினரின் 175வது அகவை நிகழ்வு



கிளரீசிய சபை நிறுவப்பட்டு 175வது அகவை நாள் மிகச் சிறப்பாக உலகளவில் கொண்டாடப்பட்டது.

72 நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மாகாணத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து 14 நாட்கள் தங்கள் ஆன்மீக பாசறையை முடித்துக் கொண்டு, சபை உருவாக்கப்பட்ட 16ம் நாள் யூலை மாதம் விக் (Vic) நகரில் கிளரீசிய சபையைச் சேர்ந்த கர்தினால் அக்குலினோ போகோஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதே நிகழ்வை இலங்கையிலும் 16ம் திகதி ஆடி மாதம் சிறப்பாக திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதிவணக்கத்துக்குரிய பேராயர் பிராயன் உடக்குவே தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருத்தந்தையின் ஆசிச் செய்தியும் அவரால் வழங்கப்பட்டது.

இதில் இலங்கை வாழ் கிளரீசிய இருபால் துறவிகளும், கிளரீசிய பொதுநிலையினரும் இணைந்து கிளரீசிய நிறுவக நாளையும், கிளரீசிய குடும்ப தின நிகழ்வையும் சிறப்பித்தார்கள்.

# இளவாலை புனித அன்னாள் ஆலயத்தின் 180ஆம் ஆண்டு நிகழ்வும் வருடாந்த திருவிழாவும்

இளவாலை புனித அன்னாள் ஆலயத்தின் 180ஆம் ஆண்டு சிறப்பு நிகழ்வுடன் இணைந்து ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஆலய அருட்பணிச்சபையினரின் உதவியுடன் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

25ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 27ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும், நற்கருணைவிழா திருப்பலியை அருட்தந்தை தேவராஜன் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# கந்தரோடை றோசா மாதா ஆலய வருடாந்த திருவிழா

கந்தரோடை றோசா மாதா ஆலய வருடாந்த திருவிழா உடுவில் மல்வம் பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

24ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 27ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை விழா இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க மைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை யாழ். மறை மாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தனர்.

# மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய வருடாந்த திருவிழா

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை தோம்மையப்பு யேசுதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 01ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெற்றது.

23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 31ஆம் திகதி புதன்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் கு ரு த் து வ கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை அருட்தந்தை விக்ரர் பிலேந்திரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா

இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன் அவர்களின் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்

2023ஆம் கல்வி ஆண்டில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் பழைய மாணவியுமாகிய திருமதி பிரதீபா காயத்திரி அவர்கள் பிரதம விருந்தினராகவும் லண்டன் நாட்டை சேர்ந்த பாடசாலையின் பழைய மாணவி திருமதி ஜெறால்டின் கிறிஸ்ரஸ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

# நாயாறு புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா

நாயாறு புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை எமில் போல் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களின் உதவியுடன் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 27ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை சல்வற்றோறியன் சபை அருட்தந்தை நிர்மல் சுரஞ்சன் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். சிலாபம் கருக்குப் பனை பிரதேச கடற்தொழிலாளர்கள் நாயாறு பிரதேசத்தற்கு வருகை தந்து வாடிகளை அமைத்து கோடைகால கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான நிரந்தர ஆலயம் கடற்படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருப்பதால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இவ் ஆலயத்திலேயே அனைத்து ஆன்மீக செயற்பாடுகளையும் இவர்கள் மேற்கொண்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாதங்கள் வழி கரம் கூப்பும் பாதயாத்திரை

கிறிஸ்தவ வாழ்வியலில் மிக தொன்மையானதும் பூர்வீக பாரம்பரியத்தைக் கொண்டதுமான பொதுசன பக்தி முயற்சி திருப் பயணமாகும். திருத்தூதர்களின் திருவுடல்களை மக்கள் தாமாகத் தரிசிக்கவும், புனிதர்களிடம் பரிந்துரைத்து இறைவேண்டல் செய்யவும் இத்திருப்பயணம் தொடங்கப்பட்டது. வரலாற்றுப் பார்வையில் மிஞ்சிய மூன்று திருத்தூதர்களின் 1ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவிற்கு வருகை தந்திருந்த திருத்தூதர் புனித தோமையாரின் திருஉடலம் சென்னையிலும், புனித இராயப்பரது உடலம் உரோமையிலும், முதல் உயிர் சாட்சியான புனித யாக்கோபு

வின் உடலம் பாசலோனா ஸ்பானியாவிலும் உள்ளன. அத்துடன் பெருமான் இயேசு வாழ்ந்த பாதம் பட்ட இடங்களை தரிசிக்க புனித நாட்டுத் திருப்பயணங்கள் தொடங்கியது.



**மடுத்திருப்பதி நோக்கி பாதயாத்திரை**

வட மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை போன்ற இடங்களில் இருந்து கடந்த 75 முதல் 100 வருடங்களாக குடும்பமாக, குழுவாக மிகத் துணிச்சலுடன் ஆபத்தான மிருகங்கள் வாழும் அடர்த்தியான காடுகளின் ஊடாக பாதயாத்திரை எடுத்தது ஒரு புரியாத புதிர்.

கடந்த 06 ஆண்டுகளாக குருநகர் மக்கள் இரு அமைப்புகளாக மடுத்திருப்பதிக்கு பாதயாத்திரை எடுக்கிறார்கள். ஜுலை மாதம் பிறக்கவும் இவ் அமைப்புகளின் ஆயதங்களும், ஆரவாரங்களும் களைகட்டும். இதன் முக்கிய அம்சமாக 40 நாட்கள் நோன்புடன், நீல ஆடைகளுடன், கழுத்தில் செபமாலையுமாக ஊர் வலம் வரும். எங்கும் கடும் நீலமயம். மாலை நேரங்களில் குருநகர் சிற்றாலயங்களில் 5.00 மணி முதல் 6.00 மணி வரை செபமாலை வழிபாடுகள் இடம் பெறும். இவ்விருகுழுக்களில் 1600 கால்நடைத் திருப்பயணிகள் குருநகரில் இருந்து வெவ்வேறு நாட்களில் புறப்பட்டு 120 கிலோமீட்டரை 4 தரிப்பிடங்களில் இரவு இளைப்பாறிச் செல்வார்கள். இந்நாட்களில் குருநகரிலிருந்து வாகனங்கள் மூலம் தயாரித்த உணவு இவர்களிற்குப் பரிமாறப்படும். முதலாவது பூநகரி புனித அந்தோனியார் ஆலயம், அடுத்து செம்மண்குண்டு புனித யோசவ்வாஸ் ஆலயம், முழங்காவில் மரியன்னை ஆலயம், இலுப்பைக் கடவை புனித செபஸ்தியார் ஆலயம், இறுதியாக பரப்புக்கடந்தான் கர்த்தர் கோயிலில். இரு நாட்கள் தங்கி மடுத்திருப்பதியை அடைவர்.

**இடம்விட்டு இடம் பெயர்தல் மனிதனது மரபு.**

வேட்டையாடி நாடோடியாக அலைந்து திரிந்த மனிதன், இடம் விட்டு இடம் பெயர்தல் அவனது மரபினுள் பதிந்தது. சமகாலத்தில் இயற்கைக் காட்சிகள், வேறுபட்ட கால நிலைகள், இளைப்பாற்றி, உடல்நலம் போன்ற அனுபவங்களுக்காக, கண்டம் விட்டு கண்டம் வலம் வரும் சுற்றுலாவிகளைக் காண்கிறோம். ஒரு சில நாடுகள் சுற்றுலாவிகளின் வருகையில் பொருண்மியம் தங்கி உள்ளது. பெரும்பாலும் அனைத்து நாடுகள் இதை ஊக்குவிக்கின்றன.

**மனிதன் தனது சுயத்துக்குள் பயணம்**

வாழ்வில் பல துன்பங்கள் அவனை ஆட்டிப் படைக்க, தேவைகள் அதிகரிக்க. வாழ்வின் நோக்கத்தை அறிந்து கொள்ள, தன்னுள் இருக்கும் சக்தியைத் தேட மனிதன் தனது சுயத்துக்குள் பயணம் செய்யத்தொடங்கினான். வேற்று இடங்களில்

**அமிர்த யெயசேகரம்**

காணத்துடித்தான். அதன்விளைவு திருப்பயணங்கள்.

4-5 ஆம் நூற்றாண்டில் திருப் பயணங்கள், பாதயாத்திரைகள் வசதிகள் அற்ற காலத்தில் தொடங்கியது பெரும்புதிராக உள்ளது. கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு, கொல்லப்பட்ட உயிர் சாட்சிகளின் கல்லறைகளைத் தரிசிக்கவும், திருப்பயணங்கள் செய்யவும், கான்ஸ்ரன்ரைன் பேரரசின் தாயார் புனித ஷெலெனாள் மேற்பார்வையில் புத்துயிர் பெற்றது. அத்துடன் இயேசு பெருமான், திருத்தூதர்கள் வாழ்ந்து பாதம் பட்ட புனித நாட்டைத் தரிசிக்கவும், தமது கண்களால் பார்த்துத் தொட்டு அனுபவிக்கவும் முடிந்தது. நாம் பார்க்கவும் தொடவும் முடிகிறது என்கிறார் தந்தை புனித ஜெருசலேம் சிறில். புனித நாட்டுத் தரிசிப்பு உள உடலைக் குணமாக்கும் சக்தி நிறைந்தது. தீய சக்திகளில் இருந்து விடுபட உதவும். அத்துடன் பாவ நிலைகளுக்குப் பரிகாரமாகி இறைவனுடன் ஒப்புரவாகுதல் என்ற நம்பிக்கை மேலோங்கி நின்றது. திருப்பயணங்கள், புனித அகுஸ்தினார் கூறுவதுபோல் விண்ணக வீட்டை நோக்கிப் பயணிக்கும் திருஅவை.

**திருயாத்திரையின் மூலவிசை திருவிவிலியம்**

திருயாத்திரை பக்தி முயற்சி செயல் வடிவு பெற சில நூற்றாண்டுகள் எடுத்தாலும், அதன் மூலவிசை திருவிவிலியம் ஒன்றுதான். ஒரு திருப்பயணியாக இவ்வுலகில் வாழ்வது விவிலியத்தின், குறிப்பாக பழைய ஏற்பாட்டில் முற்றுமுடிவான கருப்பொருள்.

விடுதலைப்பயண நூல் திருப் பயணிகளுக்கு ஒரு வழிகாட்டி. இஸ்ரேல் மக்கள் தமது சொந்த நாட்டை அடைய முதல் 40 வருடங்கள் அலைந்து திரிந்தது கால்நடைத் திருப்பயணங்களின் முற்சுவை. (யோசுவா 1:1-5) இப்பயணம் சுயநலம் ஆட்கொண்ட உலகில் இருந்து வாக்களிக்கப்பட்ட விண்ணகத்திற்கான பயணச் சிந்தனைத் துளிகள் கோர்க்கப் பட்டுள்ளது.

**புனித யாக்கோபுவின் கல்லறை, இஸ்பானியா.**

உலகில் பாதயாத்திரைக்கு மிகவும் பிரபல்யமானது இஸ்பானியாவில் அமைந்துள்ள "கொம் போஸ்ரோலா" (நட்சத்திரங்கள் வளாகம்) இங்கு அமைந்துள்ள புனித யாக்கோபுவின் கல்லறை. ஐரோப்பாவில் பல நாடுகளில் இருந்து பாதயாத்திரைகள் இடம் பெறும். பெரும்பாலும் 1000 கிலோ மீட்டர் வரை பாதயாத்திரையாகச் செல்வார்கள். ஒரே நாளில் செய்து முடிப்பதல்ல. சில வருடங் களும் எடுக்கலாம். ஒரு வருடம் அண்ணளவாக 75 கிலோமீட்டர் சென்றால், அதிலிருந்து வீடு திரும்பி அடுத்த வருடம் விடுபட்ட இடத்திலிருந்து மீண்டும் நடைப்பயணம் தொடங்கும்.. சில வேளைகளில் 4-5 வருடங்கள் எடுக்கலாம். அதற்கான தங்குமிடங்கள், பாரிய இளைப்பாற்றியிடங்கள் அங்கு உண்டு. பாதையில் சில இடங்கள் கரடுமுரடானவையாகவும் இருக்கும். ப்ரேனிஸ் மலைச் சாரலைக் கடந்தும் செல்வார்கள். பல அற்புதங்கள் இடம் பெற்றதாக யாத்திரிகர்கள் கூறுவார்கள்.




எ.ஒய்சிலின் சேவியர்

'நண்பர்கள்' என்ற வார்த்தையை நினைக்கும் போதே இனிக்கிறது. உச்சரிக்கும்போதே உணர்வுகள் உயிர் பெறுகிறது. இதயத்தின் ஆழத்தில் எண்ணும் போதே இன்பம் பிறக்கிறது! 'நண்பர்கள்' என்பவர்கள் கடவுள் தரும் வரங்கள். 'நட்பு' என்பது மிகவும் அழகான, அற்புதமான வார்த்தை. நண்பர்கள் இல்லாமல் வாழ்க்கை முழுமை பெறாது. வழித்துணையாக, வளர்ச்சித் துணையாக வருபவர்கள் நண்பர்கள்.

'நட்பு' என்னும் உறவைக் கொண்டாட உருவாக்கப்பட்ட நாள்தான் 'நண்பர்கள் தினம்'. உண்மையான நண்பர்கள் வைரங்களைப் போன்றவர்கள். "உண்மையான நட்பைவிட இந்தப் பூமியில் மதிப்புக்குரியது எதுவுமில்லை" என்கிறார் புனித தாமஸ் அக்குவினாஸ்.

இவ்வுலகில் எந்தச் செல்வங்களையும், சொத்துகளையும் பெற்றிருந்தாலும் நண்பர்கள் என்ற சொத்துக்கு முன்னால் எதுவும் நிலைத்து, நீடித்து நிற்க முடியாது. எதுவும் நம்மைத் தொடர்ந்து வர முடியாது. ஆனால், நல்ல நண்பர்கள் நம்மைப் பின் தொடர்வார்கள். எச்சூழலிலும் உடனிருப்பார்கள், உதவி செய்வார்கள். நேசிப்பார்கள், நெருக்கமாக இருப்பார்கள். ஆதரிப்பார்கள். அரவணைப்பார்கள், இன்ப துன்பங்களில் பங்கெடுப்பார்கள், பகிர்ந்து கொள்வார்கள், பங்களிப்பைத் தருவார்கள், பாசாங்கு செய்யாமல் பாசம் காட்டுவார்கள். வெற்றி, தோல்வி, மகிழ்ச்சி, துன்பம் என அனைத்துச் சூழல்களிலும் நம்மோடு பயணிப்பார்கள். பங்கெடுப்பார்கள்.

நண்பர் அருள்களைப் பற்றியும், நட்புகளைப் பற்றியும் எழுதாத எழுத்தாளர்கள் இல்லை, ஏனென்றால், நண்பர்கள் இல்லாத மனிதர்கள் இரத்தமில்லா உடலைப் போன்றவர்கள். "நட்பு என்பது உலகில் விளக்குவதற்குக் கடினமான விசயம். இதை நீங்கள் பள்ளியில் கற்றுக் கொள்வதில்லை. ஆனால், நட்பின் அர்த்தத்தை நீங்கள் கற்றுக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் உண்மையில் எதையும் கற்றுக்கொள்ளவில்லை" என்று முகமது அலி என்பவர் கூறுகிறார். திருவள்ளுவரும் நட்பைப் பற்றி மிகச் சிறப் பாகக் குறிப்பிடுகிறார். குறிப்பாக, (குறள் 781)

நட்பைப்போல் ஒருவன் செய்து கொள்வதற்கு அருமையான செயல் எதுவுமே இல்லை. நட்பைப் போல் செயல்களுக்கு அருமையான பாதுகாப்பும் இல்லை என்பதே இதன் பொருளாகும். 'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு' (குறள் 786) இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல. உளமார, இதயமார நேசிப்பதே உண்மையான நட்பு எனவும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இவ்வுலகில் நல்ல நண்பர்களைப் பெற்றுக் கொள்வது கடவுள் கொடுத்த கொடை. ஏனென்றால், அவர்கள் நம்மை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும் வேர்கள். நாம் விழும்போது விழுதாய் நின்று தாங்கிச் சுமப்பவர்கள். தடுக்கி விழும் போது நிலமாய் நின்று தாங்குபவர்கள் நண்பர்கள்.

# அன்பின் மகிழ்வு




**பெற்றோரே நம்பிக்கையின் முதல் ஆசிரியர்கள்.**

குடும்பம் அடிப்படையில் நம்பிக்கை வாழப்படுகின்ற முதன்மையான இடமாகும். நம்பிக்கையை வளர்த்தெடுப்பதில் குடும்பம் ஓர் இன்றியமையாத குடும்ப சூழலை உருவாக்குகின்றது என்பதனை திருவிவிலியம் அழகாக எடுத்துரைக்கின்றது.

பாஸ்காக் கொண்டாட்டத்தின் போது இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் கொடுத்த அறிவுரைகள் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. பாஸ்காக் கொண்டாட்டத்தின் போது பெற்றோர் அக்கொண்டாட்டத்தில் உள்ள சடங்குகளைப் பிள்ளைகளுக்கு விளக்குவர். வி.ப:12:26-27 : "உங்கள் பிள்ளைகள் உங்களைப் பார்த்து "இவ் வழிபாட்டின் கருத்து என்ன? என்று கேட்கும் போது, நீங்கள், இது பாஸ்காப் பலி, அவர் எகிப்தியரை சாகடித்த போது, எகிப்திலுள்ள இஸ்ராயேலரின் வீடுகளைக் கடந்து சென்றார். இவ்வாறு நம் வீடுகளுக்கு அவர் மீட்பளித்தார்' எனக் கூறுங்கள்". எனவே பெற்றோர், பிள்ளைகள் நம்பிக்கையைப் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கக் கூடியவயர்களாக இருக்க வேண்டும். மேலும் பிள்ளைகள் தம் பெற்றோரிடம் கடவுள் கட்டளைப்படி கட்டளைகள், நியமங்கள் என்பனவற்றின் உட்பொருள் என்ன என்று கேட்கும் போது அதன் உட்பொருளை விளங்கப்படுத்தக் கூடிய வகையில் பெற்றோர் இருக்க வேண்டும் என்பதையும் இணைச்சட்ட நூல் 6:20-25 கூறுகின்றது.

திருப்பாடல் 78:3-6 பிள்ளைகளின் ஆன்மீக உருவாக்கத்தில் பெற்றோரின் பங்கு பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. குறிப்பாக இறைவன் பெற்றோருக்கும் பெற்றோரின் பெற்றோருக்கும் செய்தவற்றைத் தம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். இவ்வாறாக பெற்றோர் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க கடமைப் பட்டுள்ளனர். குறிப்பாக ஆண்டவரின் வலிமைமிகு புகழ் மிகு செயல்களைப் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குத் திருமறையின் படிப்பினைகளைப் பற்றிக் கற்றுக் கொடுக்க

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

வேண்டும்.(வி.ப13:14) இவ்வாறு கற்றுக் கொடுக்கும் போதே ஒரு குடும்பத்தில் இளைஞர், கன்னியர், முதியோர் என எல்லோருமே கடவுளைப் போற்றிப் புகழ்வார்கள். திரு(148:12).

மொத்தத்தில் பெற்றோரே பிள்ளைகளின் நம்பிக்கையில் முதல் ஆசிரியர்கள் என்று "அன்பின் மகிழ்வு" திருமடல் குறிப்பிடுகின்றது. மனிதப் பண்புகளின் முதல் பள்ளியாகவும் இன்னும் இறைவன் தந்த சுதந்திரத்தை ஞானத்துடன் பயன்படுத்தக் கற்றுக் கொடுக்கும் மையமாகவும் குடும்பம் செயற்படுகின்றது என்று திருத்தந்தை இரண்டாவது ஜோன் பவுல் குறிப்பிடுகின்றார். பெற்றோரின் முதல் கடமை தம் பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவ நம்பிக்கைக் கல்வி வழங்குவதாகும் என்று புனித ஜோன் கிறிஸ்தோஸ்தம் தெரிவிக்கின்றார். குழந்தைகள் கடவுள் அழகை இவ்வுலகில் வெளிப்படுத்துகின்றனர். இவர்களே குடும்பத்திற்கு இறைவன் அளிக்கும் மிகப்பெரும் பரிசு. குழந்தைகள் தம்மைத்தாமே பராமரிக்க முடியாததால் அவர்கள் எப்போதும் நம்மைச் சார்ந்து இருக்கிறார்கள். ஆனால் தற்போதைய பெற்றோர் தாம் பெற்றோராக இருப்பதற்கான அர்த்தத்தை மறந்து விட்டதன் காரணம் அவர்களுக்குப் பெற்றோராக இவர்கள் சிரிக்க, அன்பு செலுத்த, மன்னிக்க மறந்து விட்டனர். இவ்வாறு அன்னை திரேசாள் பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமை பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்தவ நம்பிக்கையிலும், நெறிகளிலும் சிறந்த கல்வியையும், பயிற்சியையும் வழங்கும் இடம் குடும்பமாகும் என்கின்றார் திருத்தந்தை புனித இருபத்தி மூன்றாம் யோவான். ஒரு நல்ல குடும்பத்துக்கு சமனான பள்ளி எதுவுமில்லை. பெற்றோருக்கு சமனான ஆசிரியர் எவருமில்லை. எனவே குடும்பம் என்பது ஓர் மிகவும் முக்கியமான சமூகத்தின் திருஅவையின் அலகாகும். இதில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

# "களம் தந்த களங்கம்"

**— ஓர் பார்வை**

**கடல் அலைகள் கொஞ்சம்**
**நகர்க் காவலரே வாழ்க!**
**கலை குலவும் விஞ்சுநகர்**
**கோமகனே வாழ்க!**

என்ற பாடல் வரிகளுக்கமைய கடல் வளமும், கலை, கல்வி, தலைத்தோங்கும் குருநகர் மண்ணில் எப்போதும் கலை நிகழ்வுகளுக்குப் பஞ்சமே இருக்காது. அந்தளவுக்கு ஆங்காங்கே கலை நிகழ்வுகள் வருடம் தோறும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். இதில் புனிதரின் திருவிழாவை முன்னிட்டு வருடம்தோறும் கலை நிகழ்வுகள் அரங்கேறுவது வழமை.

இந்நிகழ்வுகளில் இறுதி அம்சமாக, இறுதிப் படைப்பாக நாட்டுக்கூத்து நடைபெறும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஆரம்ப காலங்களில் பல இடங்களில் இந்தக் கூத்துக்கள் நடைபெறும். அந்த வகையில் பல கூத்துக்களை மேடையேற்றிய, பல கூத்துக்களை எழுத்துருவாக்கம் செய்த, பல கலைஞர்கள், பல அண்ணாவிமார்கள் வளர்ந்த , வளர்த்தெடுத்த மண்ணுக்குரிய பெருமை "குருநகர்" மண்ணிற்கு உண்டு.

வரலாற்றில் அறியப்பட்ட தகவல்களின்படி 1870 களில் 20 மன்றங்கள் இக் குருநகர் மண்ணில் இயங்கியுள்ளன என வரலாறுகள் கூறி நிற்கின்றன. கலையின் வளர்விடமாக இக் குருநகர் மண் திகழ்ந்துள்ளது என்பது திண்ணம். அந்த அளவிற்கு இவ்வூர் மக்கள் கலையை நேசித்தார்கள் என்பதைச் சொல்வதில் ஐயமில்லை. சம காலத்தில் இந்தக் கூத்துக் கலை அருகிச் சென்றுகொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அருகிச் செல்லும் இக்கலை யாழ். குடாநாட்டில் சில இடங்களில் மட்டும் தான் வளர்ந்து பிரசித்தி பெற்று வருகின்றது. அந்த இடங்களில் ஒன்றாகவே குருநகர் விளங்குகின்றது. நவீன உலகின் போக்கு, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும் கலைகளைப் புதைத்துள்ளது.

எமது மண்ணின் பாரம்பரியங்களையும், கலைகளையும், அடையாளங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அந்த வகையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு மேடையேற்றப்பட்ட "களம் தந்த களங்கம்" என்ற தென்மோடி நாட்டுக்கூத்துப் பற்றிய விமர்சனத்தை முன்வைக்கின்றேன்.

**புனித யாகப்பரின் வரலாறு**

புனித யாகப்பரை மாட்சிப்படுத்த விரும்பிய நம் ஆண்டவர் கம்போயா நகரில் புனித சந்தியாகப்பர் சமாதி கண்டுபிடிக்கப்பட்டது. புனிதருக்கான ஆலயமும் கட்டப்



பட்டது. இந்த ஆலயம் கட்டப்பட்டு சந்தியாகப்பர் புகழ் அந்த ஜபிரிய தீபகற்பம் முழுவதும் பரவ ஆரம்பித்ததால் ஸ்பெயின் நாட்டிற்கு வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் தூய சந்தியாகப்பரைத் தரிசிக்க மக்கள் படை எடுத்து வந்தனர். இதனால் வியாபாரம், தங்குமிடம், போக்குவரத்து, கடல் வளங்கள் என்பன பரிமாறப்பட்டு செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்தது.

ஸ்பானியாவோடு நட்புடன் இருந்தது பல வல்லரசு நாடுகளான துருக்கி, ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. இதனால் ஸ்பெயின் மக்களுக்கும் பிற மத மக்களுக்கும் அடிக்கடி சண்டை வெடித்தது. வாகைமேரோன் என்ற துருக்கிய மன்னன் பல சாம்ராயங்களைப் பெற்றுக் கொண்டு அடிமைப்படுத்தி அங்குள்ள மக்களின் செல்வங்களை எல்லாம் சூறையாடி, மக்களை அடிமையாக்கிக் கொலை செய்து வந்தான்.

வாகைமேரோன் என்ற துருக்கிய மன்னன் அனைத்து நாடுகளையும் தன் காலடிக்குக் கீழ்... (அடுத்த இதழில்)

**அ. றொக்சன்**

## அகவொளி குடும்ப நலமையம்
## திருமண சேவை



### மணமகள் தேவை

வயது - 38
கல்வித்தகைமை- A/L
தொழில் - விவசாயம்.
பிரதேச செயலகம் - ஊர்காவற்துறை
உயரம் - 5.6
எதிர்பார்ப்பு - படித்த குணமுடைய அழகான பெண்.

---

வயது - 40
கல்வித்தகைமை - A/L
தொழில் - விவசாயம்
பிரதேச செயலகம் - ஊர்காவற்துறை
உயரம் - 5.6
எதிர்பார்ப்பு-படித்த குணமுடைய அழகான பெண்.

---

வயது - 31
கல்வித்தகைமை - Engineer.
தொழில் - Engineer[Australia]
பிரதேச செயலகம் - கம்பகா.
எதிர்பார்ப்பு - வைத்தியர் அல்லது பல்வைத்தியர் விரும்பத்தக்கது.

---

### மணமகன் தேவை

வயது - 30
கல்வித்தகைமை - AACA/PG
பிரதேச செயலகம் - கொழும்பு
தொழில் - பிரதம கணக்காளர் கனடா.
எதிர்பார்ப்பு - நன்கு படித்தவராகவும், றோமன் கத்தோலிக்க மதத்தவராகவும் இருத்தல் நன்று.

---

வயது - 36
கல்வித்தகைமை - HNDA
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம் - திருகோணமலை.
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் அரச சார்பான கூட்டுத்தாபனங்களில் அல்லது தனியார் துறையில் நிறைவேற்று உத்தியோகம்.

---

வயது - 39
கல்வித்தகைமை - BBA
தொழில் - Assistant Account Manager
பிரதேச செயலகம் - வவுனியா.
எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகத்தர்.

---

வயது - 44
கல்வித்தகைமை - BA
தொழில்-அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம்-தெல்லிப்பளை.
எதிர்பார்ப்பு-அரச உத்தியோகத்தர்.

---


வயது - 53
கல்வித்தகைமை - G.C.E.A/L
தொழில் - Trained English teacher - Government work
பிரதேச செயலகம் - வவுனியா.
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகத்தர்.

---

வயது - 30
கல்வித்தகைமை - Diploma in medicine
பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்.
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகத்தர்.

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077- 942 2970, 077 - 904 7651, 021- 222 2856**

சிறுகதை



# ஓர் ஆடு!

சிறில் அலெக்ஸ்

நான் நீண்ட நாள்களாக அவரைக் கவனித்து வருகிறேன். எங்கள் பங்கின் துணைப் பங்குத் தந்தை. சற்று வித்தியாசமான நபர்தான். வயது குறைவுதான். அதிகம் பேசுவதில்லை. அடிக்கடி தனியே கோவிலில் சென்று செபிக்கிறார்.

இளைஞர்களுடன் ஓரளவுக்குப் பழகக் கூடியவர், தேவைப்பட்டால் கண்டிக் கக் கூடியவர். சில இளைஞர்கள் அவரிடம் நன்றாக அடிவாங்கியிருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன்.

பலருக்கும் அவர் வழக்கமான சாமியார் போலத் தோன்றினாலும், எனக்கு அவர்மீது சற்றே உயர்ந்த எண்ணம் வரக் காரணம் என்ன வென்றால், அவர் தினமும் ஒருமணி நேரம் ஒப்புரவு அருள் சாதனப் பெட்டியில் அமர்ந்திருப்பார். ஒருநாள் அவரிடமே கேட்டுவிட்டேன். "சாமி. எல்லாநாளும் பாவசங்கீர்த்தனத்துக்கு உக்கார்ந்திருக் கீங்களே... யாரும் வருகிறாப்ல தெரியலியே?" என்றேன்.

"இல்லையே, வருவாங்களே" என்று சமாளித்தார்.

"சாமி, நீங்க இங்க வந்து நாலு மாசம் ஆகுது, நான் பாத்துக்கிட்டே இருக்கேன், சனிக்கிழமை ஒண்ணு ரெண்டு பேர் வர்றாங்க, ஆனா தினமும் ஆள் வர்றதில்ல" என்றேன். அவர் என்னிடம் பேச யோசித்தது போல இருந்தது. "இந்தக் காலத்துல பாவம்னா என்னண்ணு கேக்கிறாங்க சாமி, இல்லியா?" "ம்ம்..." என்றார்.

"அப்புறம் யாருக்காக சாமி அதுல காத்திருக்கீங்க?" என்றேன். "ஓர் ஆட்டுக்காக" என்றார்.

"புரியல" என்றேன். "தாங்கள் பாவியே இல்லைண்ணு நம்பிகிட்டிருக்கிற 99 ஆடுகளைவிட, நான் பாவி என்ன மன்னியும்ணு கோவிலத் தேடி ஓடி வர்ற ஓர் ஆடு இருக்கும்ல? உலகம் முழுக்கப் பாத்தீங்கண்ணா தினமும் ஒருத்தராவது சர்ச்சுக்குப்போய் மன்னிப்புக் கேப்பாங்கல்ல?" என்றார். நான் அப்படி யோசித்ததில்லை. அது உண்மையாக இருக்கலாம் என்று தோன்றியது. உலகம் முழுவதும் எத்தனையோ கோடி கோவில்கள் இருக்கின்றன. 130 கோடி கத்தோலிக் கர்கள் இருக்கின்றார்கள். இதில் ஒரு நாளைக்கு ஒருவராவது அப்படிச் செல்ல வாய்ப்பு உள்ளது. ஆனாலும், இது ஒரு கணக்குத் தான் என்றும் தோன்றியது. பிரபஞ்சத்தில் இலட்சக்கணக்கான கோடிகளில் கோள்கள் உள்ளன எனவே வேறு கோள்களில் உயிர்கள் இருக்கலாம் என்பது போன்ற கணக்கு. நான் மேலும் அவரிடம் கேட்டேன் "சாமி, அப்படி ஓர் ஆளையாவது. ஓர் ஆட்டையாவது உங்களுக்குத் தெரியுமா?"

அவர் என் கண்களைப் பார்த்து "தெரியும்" என்றார். அத்துடன், "உங்களுக்கும் தெரியும்" என்றார். 'நம் பங்கில் உள்ளவரா!' என்கிற ஆர்வத்தில் "யார் அது?" என்றேன். "புனித அகுஸ்தினார்" என்றார். சற்று ஏமாற்றத்துடன் "போங்க சாமி, இந்தக் காலத்துல யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?" என்றேன். அவர் யோசித்துச் சொன்னார்.

"எனக்கு நல்லா தெரிஞ்ச ஒரு பையன். ஊர்ல சின்ன வயசிலயே படிப்பு ஏறாம சின்னச் சின்னதா பல பிரச்சினைகள் செஞ்சுகிட்டு அலைஞ்சான். அம்மா, அப்பா என்ன வெல்லாமோ முயற்சி செஞ்சு பாத்தாங்க. திருட்டு, கெட்ட பழக்கங்கள்! அவன்கூட சேர்ந்த பசங்க எல்லாரும் கெட்டுப் போனாங்க. பத்தாம் வகுப்பு படிக்கும்போது ஊர் குளத்துல குளிக்கும்போது ஒரு விபத்து. ஒரு பையனுக்குக் கால் போயிடுச்சு. இவனாலதாண்ணு பிரச்சினை போலிஸ் வரைக்கும் போயிடுச்சு. அவனைச் சென்னைக்குத் தூரத்துச் சொந்தக் காரங்க வீட்டுக்கு அனுப்பி வச்சாங்க. அங்கயும் அவன் திருந்தல. நேரடியா குற்றத் தொழில்களையே செய்ய ஆரம்பிச்சிட்டான். ரெண்டு வருடங்களுக்குள்ளாற பல 'தொழில்கள்'. சென்னையில ஒரு பகுதியில இருந்த எல்லாப் போலிசுக்கும் அவன நல்லா தெரியும். சில ஸ்டேஷன்ல மரியாத குடுப்பாங்க, சில ஸ்டேஷன்ல அடிச்சுத் துவைப்பாங்க. அவன் ஒரு முழுநேரக் குற்றவாளியா இருந்தான்.


அப்ப ஒரு புது ஆட்சி வந்தப்ப போலிஸ் கடுமையா ரெய்டு நடத்தினாங்க. அவன் சொந்தக் காரங்க வீட்டில புகுந்து எல்லாரையும் அடிச்சுத் துவைச்சாங்க. அடி தாங்க முடியாம அவனோட சித்தப்பா படுத்த படுக்கை ஆயிட்டார். சென்னையில சாக்கடைல ஓடுற ஒரு பெருச்சாளி மாதிரி யார் கண்ணிலேயும் படாம அவன் சுத்திக்கிட்டிருந்தான். ஊர்ல அம்மா, அப்பா, தங்கச்சிண்ணு எல்லாருக்கும் போலிசால அவமானம். அவன வச்சி பிழச்சவங்க எல்லாரும் கைவிட்டுட்டாங்க, கூவத்து கரையில பண்ணிகளோட தூங்கினான். நாட் கணக்கா சாப்பாடில்லாம இருந்தான்.

இடையில அவன் சித்தப்பா இறந்துட்டார். அவர் வீடே நிலைகுலஞ்சு போயிடிச்சு. ஒரு நாள் எங்கேயோ கோவில் மணி அடிச்சத கேட்டான். மணி உண்மையிலே அடிச்சதா? இல்லையாண்ணு அவனுக்குத் தெரியல. பசி மயக்கமா கூட இருந்திருக்கலாம். அந்தச் சத்தம் வந்த இடத்த நோக்கிப் போனான். அது கோவில்தான். தோட்டத்தில தண்ணி மொண்டு குளிச்சான். கெபிக்கு முன்னால மண்டிபோட்டு, கைய விரிச்சு அழுதான்.

அந்தக் கோவில் ஃபாதர் வந்தப்ப, வெளிய இருந்த வியாகுல மாதா சுரூபத்துக்கு முன்னால மயங்கிக் கிடந்தான். அங்கிருந்து அவன் போன பாதை ரொம்ப மலைப்பானது. இயேசு அவன தம் தோளில் தூக்கிட்டு நடந்தாரு" என்று நிறுத் தினார். அவர் கண்களில் ஒளி பட்டு, எதிரொளித்தது.

"ஓ! சினிமாக் கதைபோல இருக்குது சாமி. நீங்க சொல்றது உண்மைதான். இப்படி ஒருவர் மனம் மாறி வருவார்ணா நான் கூட அடிக்கடி பாவசங்கீர்த்தனத்துக்கு வந்துருவேன்" என்றேன். அவர் சிரித்தார். நானும் சிரித்தேன். இறுதிவரை அந்த மனம் மாறிய ஆடு யார் என்று அவரும் சொல்லவில்லை, நானும் கேட்க வில்லை. ஆனால், அவரை எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் நன்றாகத் தெரியும், இல்லையா?

# உயிர்வதை நாட்குறிப்பு



மனோ சின்னத்துரை

எங்கும் கொரோனா பற்றிய பேச்சாகவே இருந்தது. உலகம் மிரண்டுபோயிருந்தது. சாவு நெருங்கிவிட்டதாக மனிதர்கள் கிலேசமடைந்தார்கள். அரசுகள் நடுங்கின. எல்லோரும் வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டனர்.

எனக்குப் பசித்தது. பாண் வாங்கிக் கொண்டு நடந்தேன். தெருமுனையில் ஒரு யாசகன். கையேந்தினான். ஒரு துண்டுப்பாணை என் கைகளால் பிரித்துக் கொடுத்தேன். முகச்சுழிப்போடு விலகினான். அவமானமாய் இருந்தது.

அருகிலுள்ள கடைக்குச் சென்றேன். என் நண்பன் எதிர்ப்பட்டான். கொரோனா வைரஸ் எச்சரித்தபோது கைகொடுக்கத் தயக்கமாக இருந்தது. நீண்ட எனது கைகளை 'சடக்'கெனச் சுருக்கிக் கொண்டேன். 'உந்த வைரஸ் மச்சான் எங்களை ஒண்டுஞ் செய்யாது' என அவன் என்னை இறுக அணைத்துக் கொண்டான்.

பஸ் பயணத்தில் ஒரு சீன யுவதி அருகில் வந்தமர்ந்தாள். எவ்வளவுதான் என்னைக் கட்டுப்படுத்தினாலும் மனசு படபடக்கவே செய்தது.

மாலை வீடு வந்ததும் பத்துவயது நிரம்பிய எனது மகள் சோர்ந்திருந்தாள். பதட்டத்துடன் "காய்ச்சலா" என்றேன் இல்லை என்றாள். ஆனாலும் அவளது மனசு நடுங்குவதை அவதானிக்க முடிந்தது. அப்பா! ஒன்று கேட்டால் ஒம் என்று சொல்லுவீங்களா? இது அவளது வழமையான வெற்றிகொள்ளும் பீடிகை "முதல்ல சொல்லுங்கோ பிறகு பார்ப்போம்" என்றேன். வாற சனிக்கிழமை என்னுடைய "சீனுவா" நண்டுக்குப் பிறந்தநாள் வீட்டுக்கு வரச்சொல்லிக் கெஞ்சுறா என்றாள் - கெஞ்சும் தொனியில். அம்மா ஏற்கனவே விழி பிதுங்கிப் போயிருந்தார்.

நான் என்னைச் சுதாகரித்துக்கொண்டேன். பாரிஸ் - பெல்ஜியம் புகையிரதத்திலிருந்து இறக்கி விடப்பட்ட இரண்டு இளம் சீன மாணவர்கள் மனதில் மின்னி மறைந்தார்கள். மகளை இறுக அணைத்தேன். கண்கள் கசிந்தோடின இரண்டு மாதங்களின் பின் கொரோனாவுடன் வாழப் பழகுதல் முதலாம் நாள்இரவு தூக்கம் வரவில்லை மூளை சோர்ந்திருந்தது. கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ளுங்கள்! என்ற பிரெஞ்சு அதிபரின் கோரிக்கையை ஏற்பதைத் தவிர வெறு வழியில்லை.

வழமையைவிடக் காற்று பயங்கரமாகஇருந்தது. குளிரும் அதிகமாகவே இருந்தது. பஸ்ஸிற்கு 15 நிமிடம் காத்திருப்பது மிகவும் சிரமமாக இருந்தது. இரண்டாவது பஸ் எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டேன். குளிர்காற்று அதிகமாக இருந்தாலும் இருபது நிமிடம் நடந்தே செல்வது பாதுகாப்பாக இருக்கலாம்! நடக்கத் தொடங்கினேன். ஒரு ஆபிரிக்கப் பெண்மணி இன்னொரு ஆபிரிக்க மனிதனுக்குப் பிச்சை போட்டார். அந்தக்காட்சி மனதைப் பிசைந்தது.

வெஸ்ரன் யூனியனில் காசு அனுப்புவதற்காகப் பலர் நீண்ட வரிசையில் காத்திருந்தார்கள். உறவுகளின் வலி அவர்களின் முகத்தில் தெறித்தது. முடி திருத்தும் நிலையங்கள் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தன. கடைகளுக்கு வெளியே சமூக இடைவெளியைக் கடைப் பிடித்தார்கள். ஏனைய கடைகளில் வாடிக்கையாளர் புழக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. பலரையும் போல சலூன் ஊழியர்களும் கொரோனாவால் பலத்த பாதிப்புக்கு உள்ளாகியிருப்பார்கள். ஒரு தடவை முடிதிருத் தும் கூலி பலருக்கும் எஞ்சியிருக்கும். அதில் ஐந்து யூரோவையாவது அவர்களுக்கு மேலதிகமாகக் கொடுத்தால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்கள்! கொரோனாவிற்குப் பயந்து அநாதரவாக விட்டுவிட்டு ஓடிய பணித்தளத்துள் நுழைவதற்குக் கால்கள் கூசின. மனசும் சேர்ந்தே.

( தொடர்ச்சி 7ம் பக்கம்)



# நட்பு

பணத்தைச் சம்பாதிக்காதவன் ஏழை அல்லன். நட்பு மனங்களைச் சம்பாதிக் காதவன் தான் உண்மையான ஏழை.

உறவை விட நட்பு உயர்ந்தது. உறவு நம்மீது திணிக்கப்படுகிறது. நட்போ நாமே விரும்பித் தேர்ந்தெடுப்பது. நட்பு மரத்தின் கையைப் போன்றது. அதற்குக் கொடுக்கத்தான் தெரியும். ஒத்த ஸ்வரங்களின் கூட்டிசை அது. நல்ல சுமைதாங்கி. முகஸ்துதி செய்யாத கண்ணாடி போல நம்மை நாமே திருத்திக் கொள்ள உதவுவது. தவறு செய்யும் போது தயங்காமல் கண்டிப்பது, வெயில் நேரத்தில் விசிறியாகவும், குளிர் நேரத்தில் கதகதப்பாகவும் இருப்பது. நல்ல நண்பன் கையைப் போன்றவன் என்கிறார் வள்ளுவர். நான்கு பேர் நடுவே நம் ஆடை நழுவும் போது கை விரைந்து சென்று ஆடையைத் தாங்கி மானத்தைக் காக்கிறது. "மானம் காக்க வா" என்ற அழைப்பிதழில்லாமல் தானே சென்று செப்பனிடும் கரம் போல் நல்ல சமயத்தில் தானே சென்று உதவுவதே உண்மையான நட்பு. நம் நண்பர்களைக் கொண்டாடுவோம்.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

# இறையியல் அறநெறிப் பார்வை!



திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையில் திரு அவையின் இறையியல் அறநெறி குறித்து இன்று ஏன் நாம் பேச வேண்டும்? கோபால் தாஸ் எனும் ஆன்மீக வழிகாட்டி முன்வைக்கும் மூன்று 'சி' (C) களான தொடர்பு (Connection), உருவாக்கம் அல்லது வளர்ப்பு (Cultivation), பங்களிப்பு (Contribution) இம்மூன்றையும் மையங்கொண்டதாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணியும் வாழ்வும் அமைந்துள்ளதால், அவரது அறநெறி இறையியலில் புதுப்பார்வையும், புதுத் தெம்பும் பெறுகிறது.

ஒரு செடியின் வேர்போல இறையன்பில் வேரூன்றி, தண்டு போல தன் அன்பிலும், தன்னிறைவிலும் வளர்ந்து, காய்-கனி போல பிறரன்பில் பங்களிப்புச் செய்யும் பாங்கு அவருக்கே உரியது. இறையன்பின் வழியாகக் கடவுளோடு தொடர்பு கொண்டு, தன்னன்பின் வழியாகத் தன்னையே உருவாக்கி. பிறரன்பின் வெளிப்பாடாக நற்செயல்களை ஒருவர் முன்னெடுக்க வில்லையெனில் வாழ்வு அர்த்தம் இழுந்துவிடும். அவ்வகையில், தனது இறையியல் அறநெறியில் தவறு என்கிற சாதாரண பார்வையைக் கடந்து. மன்னிப்பு என்கிற முன்னேற்றப் பார்வையை முன்வைக்கிறார். 'செய்', 'செய்யாதே' என்கிற கட்டளைத் தன்மைகளைத் துறந்து, கடமை, கண்ணியம் என்கிற உணர்வுகளுக்குக் கைகொடுக்கிறார். 'இப்படி', 'அப்படி' என்கிற போதனைகளைத் தாண்டி மனித அவலங்கள், வேதனைகளை முன்னிறுத்துகிறார். பாரம்பரிய அணுகுமுறைகளை அலசி, தொடரும் எதார்த்தங்களுக்குப் படிப்பினையைக் கற்பிக்கிறார்.

"என் மக்கள் படும் துன்பங்களைக் கண்டேன் அவர்கள் எழுப்பும் கூக்குரல் என் காதுகளை எட்டுகிறது" (விப 3:7-8) என்றயாவே கடவுளின் உடனிருப்பை இன்று நாம் வாழும் சூழல்களில் எடுத்துரைப்பதும், வாழ்வாக்குவதும் எளிதான காரியமல்ல. சவால் மிகுந்தது. அத்தகு சவால்களை அனுதினமும் சந்திப்பவர்தான் நம் திருத்தந்தை.

**அன்பு இறையியல் அறநெறி**

கேன்டர்பரி புனித அன்சலேம் பார்வையில் பாரம்பரியமாக இறையியலை 'புரிதலைத் தேடும் நம்பிக்கை' (Fides Quarens Intellectum) என்று வரையறுக்கிறோம். அதாவது. கடவுளைப் புரிந்து கொள்ள முற்படுவது நமது நம்பிக்கையே. இருப்பினும் உண்மை என்னவெனில், கடவுளின் மீதுள்ள அளவுகடந்த அன்பே அவரைப் பற்றிய ஆழமான அறிவுக்கு நம்மை வழிநடத்துகிறது. நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு (1கொரி 13:13) ஆகியவற்றுக்கு இடையே நெருக்கமான பிணைப்பு இருப்பதால், இறையியலை நாம் 'புரிதலைத் தேடும் எதிர்நோக்கு (Spes Quaerens Intellectum) மற்றும் 'புரிதலைத் தேடும் அன்பு' (Caritas Quaerens Intellectum) என்று வகைப் படுத்துவதும் தகுதியானதே.

> **நமது இறையியல் அணுகுமுறை இறையன்பின் வெளிப்பாடான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளைப் புரிந்துகொள்ளவும், அவர் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளை நம் வாழ்வில் கடைப்பிடிப்பதுமே**

எனவே, உலகின் தற்போதைய சூழலில் புனித அன்சலேமின் முன்மொழியிலிருந்து பெறப்பட்ட புரிதலைத் தாண்டிய இறையியல் பார்வையை நாம் பெறுவது அவசியம். இவ்வகையில் நமது இறையியல் அணுகுமுறை இறையன்பின் வெளிப்பாடான இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய மறைபொருளைப் புரிந்துகொள்ளவும், அவர் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளை நம் வாழ்வில் கடைப்பிடிப்பதுமே! இக்கருத்தோட்டப் பின்னணியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறையியல் பார்வையை அவர் எழுதிய முக்கிய மடல்களின் அடிப்படையில் புரிந்துகொள்ள முடிகிறது. பெரும்பாலான அவரது எழுத்துகள் அவரது 'கடவுள் அனுபவத்திலிருந்து உருவாகும் மகிழ்ச்சி' என்ற கருப்பொருளைச் சுற்றி வருகின்றன. அவரது எழுத்துகளில் வெளிப்படும் தொலைநோக்குப் பார்வையின் போக்கில் அவரது இறையியலுக்குப் புதிய வரையறையைக் கொடுப்பதாயின், அதை நாம் 'நம்பிக்கை தேடும் மகிழ்ச்சி' Faith seeking Joy) என்றே அழைக்கலாம். இறைநம்பிக்கை ஒளியில் (Lumen Fidei) மகிழ்ச்சி, நற்செய்திப் பகிர்வில் மகிழ்ச்சி (Evangelii Gaudium), படைப்புடன் இறைவனைப் புகழ்வதில் மகிழ்ச்சி (Laudato Si), அன்பில் மகிழ்ச்சி (Amoris Laetitia), உண்மையை அறிவிப்பதில் மகிழ்ச்சி Veritatis Gaudium), இன்றைய உலகில் புனிதமாய் வாழ்வதில் மகிழ்ச்சி (Gaudete et Exultate), கிறிஸ்து வாழ்வதை இளமையில் பிரதிபலிப்பதில் மகிழ்ச்சி (Christus Vivit) சகோதரத்துவத்தை வாழ்வாக்குவதில் மகிழ்ச்சி (Fratelli Tutti)... இங்ஙனம் திருத்தந்தையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கிறிஸ்தவ நடவடிக்கையின் மகிழ்ச்சியும் நமது இறையியல் பார்வையில் இருந்து உருவாகிறது.

இத்தகைய தரிசனம் நாம் வாழும் எதார்த் தத்திற்கு ஒரு நேர்மறையான கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. இயேசு நம்மை வழிநடத்த விரும்பும் புதிய எதார்த்தத்திற்குள் நம்மை அழைத்துச் செல்கிறது. அதுவே மகிழ்ச்சி நிரம்பிய இடம் அவ் விடமே கடவுளின் இருப்பிடம்!

கடந்த மே 21, 2024 தனது 'டுவிட்டர்' குறுஞ் செய்தியிலும், "நம் இறைநம்பிக்கை என்பது அன்பிலிருந்து பிறக்கிறது. இது சிலுவையில் இயேசுவின் இதயத்தில் துளைக்கப்பட்ட அன்பின் அடிப்படையில் பிறக்கிறது. தூய ஆவியார் நம்பிக்கையின் ஒளியை ஒரு நிரந்தர விளக்கைப்போல எரியச் செய்து. நம் வாழ்க்கையை நீடிக்கச் செய்து நம்மை உற்சாகப்படுத்துகிறார்" என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**வாழ்க்கை முறை அவசியம்**

வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் பிரகாசிக்கும் திருத்தந்தையின் இறையியல் அறநெறி உலகு, திரு அவையில் நாம் வாழ்வதற்கான நற்செய்தியின் அத்தியாவசிய உள்ளடக்கத்தை மிகவும் தீவிரமாக வெளிப்படுத்தும் இறையியல் வடிவத்தைக் கொண்டுள்ளது.

இறையியலாளர் தியோபால்ட் குறிப்பிடுவது போல், வடிவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் இடையிலான ஒத்திசைவின் கொள்கைக்கு இணங்க (principle of concordance between form and content), அவரது இறையியலைக் கோட்பாட்டுப் போதனையாகக் குறைக்க முடியாது. மாறாக, இது ஒரு வாழ்க்கை முறையை வெளிப்படுத்துகிறது.

எப்படிக் கடவுள் தம்மை இயேசுக் கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தியுள்ளார் என்னும் உண்மையை மையப்பொருளாகக் கொண்டு, அதன் உட்கருத்தை அறிவியல் முறைப்படி ஆய்ந்து, கடவுளின் வெளிப்பாட்டை மக்கள் தங்கள் வாழ்வில் அனுப வித்து, அறிந்து, உணர்ந்து, ஏற்று அதனடிப் படையில் கிறிஸ்துவின் சீடர்களாக வாழ்ந்திட இவ்விறையியல் துணைபுரிகிறது.

இறைவனோடு நாம் கொண்டிருக்கும் உறவுத் தொடர்பு எத்தகையதாக அமைந்துள்ளது? நம் மீதான அன்பு எத்தகு வளர்ச்சி நிலைகளை நமக்குள் ஏற்படுத்துகிறது? பிறர்நலம் சார்ந்த பங்களிப்புகள் எவற்றையெல்லாம் நாம் முன்னெடுக்கிறோம்?

**அறிவோம்! ஆய்வோம்!**
**வாழ்வை அர்த்தமாக்குவோம்!**

# இறை ஒளியை நோக்கி எம் வாழ்வு மலர

கானகக் கடலில் - காரிருள் உறையும்
கிளைகளின் அசைவில் - வெண்ணொளி மிளிரும்
கதிரவன் வரவால் - மொட்டுக்கள் அவிழும்
கண்கள் இறை ஒளியினைக் - கண்டதும் மகிழும்

ஒளியினை நோக்கியே - இறைபணிகள் தொடரும்
வழியினைத் தேடியே - விழிகளும் மிளிரும்
அழிவினைச் சுமந்தே - நிமிடங்கள் நகரும்
அழியாத வாழ்வுக்காய் - அருள் வரங்கள் மலரும்

பாவிகளின் வழியிலே - படுகுழிகள் தோன்றும்
தாவிடும் ஆன்மாக்கள் - மரணத்தில் ஊன்றும்
சாவிலும் வாழ்வுதரும் - இறைவார்த்தை என்றென்றும்
காவிடும் கழுகெனத் - தேவ அருள் தோன்றும்

இன்னல்களில் மிதக்கும் - ஏழைகளின் இதயம்
இன்பம் காணுமோ - என்றோ ஒருநாள் உதயம்
துன்பங்களைத் தாங்கும் - தூயவர் நெஞ்சம்
என்றுமே சுமக்கும் - இறையுணர்வில் துஞ்சும்

மரணத்தின் விளிம்பில் - மனிதர்களின் நெஞ்சம்
கரம் கூப்பித் தேடும் - இறைவனிடம் தஞ்சம்
இருளினிற் பரவும் - இறைஒளிக்கு அஞ்சும்
சிறுபூச்சி போலவே - கிருபைக்காகக் கெஞ்சும்

மனித உயிரை மீட்டிட - தன்னுயிரைத் தந்தவர்
மண்ணிலே தமது செந்நீர் - முழுவதுமா யீந்தவர்
கண்மலைமீதில் - ஒளியாகக் காட்சி தந்தவர்
மனுமகனாக இயேசு - நமக்காக மண்ணகத்தில் பிறந்தவர்

கயவர்களை நேசித்து - இதயங்களை வெல்வோம்
காயங்களை ஆற்றிட - கடவுளின் கருணைக்குள் செல்வோம்
ஆயன் காட்டும் வழியிலே - அருள் வாழ்வை ஏற்போம்
இயேசுவே உலக மீட்பின் - ஒளியெனச் சொல்வோம்.

**வன்னிவாழ் இதயம்**




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(ராணி, யாழ்ப்பாணம்)*
**கே: வைத்திய சேவையைப் பற்றிப் பல குற்றச்சாட்டுக்கள் பல தரத்தினராலும் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில் இன்றைய வைத்திய சேவையைப் பற்றிய உங்கள் கருத்து?**

**ப:** வைத்திய சேவையென்று கூறுகின்ற போது மருத்துவர்களின் சேவையோடு, தாதியரின் சேவை, மற்றும் ஏனைய மருத்துவத்துறை சார்ந்த பல்வேறுபட்ட பணியாளர்களின் சேவைகளும் உள்ளடங்கும். இச்சேவையில் தன்னலம் கருதாது பணியாற்றும் பல தியாகிகள் முன்னரும் வாழ்ந்திருக்கின்றார்கள், இப்போதும் வாழுகின்றார்கள். அவர்களை நாம் எப்போதும் நன்றியோடு நினைவுகூர வேண்டும். அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடன் பட்டவர்களே. முப்பதாண்டு போர்க் காலத்திலும், முள்ளிவாக்கால் நோக்கிய பயணத்திலும், சுனாமி அனர்த்தத்தின் போதும், கொரோனாப் பேரிடர் காலத்திலும் இவர்களின் சேவைகள் மிக உன்னத சேவையாக இருந்திருக்கின்றது. ஆயினும், அண்மைக் காலமாக வைத்தியத் துறைசார்ந்த பணியாளர்க-ளின் அசட்டையீனங்களாலும், கவனயீ-னங்களாலும், அசமந்தப் போக்குகளி-னாலும் நிகழும் மரணங்களுக்குப் பலரும் பொறுப்பானவர்கள் என்பதால் சொல்லப்படும் விமர்சனங்களையும் குற்றச் சாட்டுக்களையும் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தி, தவறுகள் களையப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவ-தோடு, நிறைவான சேவை வழங்கப்பட வேண்டும்.

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*
**கே: தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளராக ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார். ஆனால், சிலர், தங்களைக் கேட்டால் அதனைச் சாதகமாகப் பரிசீலிக்கலாம் எனக் கூறியிருப்பதாகத் தகவல்! இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ஒரு சம்பவமொன்று கடந்த மாகாண-சபைத் தேர்தல் காலத்தில் இடம்பெற்றது என் நினைவுக்கு வருகின்றது. எனக்குத் தெரிந்த குறிப்பிட்ட ஒருநபர், மாகாண-சபைத் தேர்தலில் போட்டியிட இருப்பதாக அறிந்தேன். அதனால் அவர் மனைவியிடமே இதனை உறுதிப்படுத்த விரும்பினேன். தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, "உங்கள் கணவர் மாகாண-சபைத்தேர்தலில் குதிக்க இருக்கின்றார் எனக் கேள்விப்பட்டேன். உண்மையா?" என வினவினேன். அவள், 'வீட்டையே பார்க்கத் தெரியாத இந்த மனிசன், மாகாணத்தைப் பார்க்கப் போறாராமோ!?' என்று என்றாள். றமேஸ், ஒவ்வொருவரும் 'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் கௌக்கிய'மாகிவிடும்!

*(சுஜி, யாழ்ப்பாணம்)*
**கே: ஜனாதிபதித் தேர்தலில் முன் னிலை பெறும் சிங்களக் கட்சியொன்றுக்கு வாக்களிப் பதுதான் தமிழ்மக்களு-க்கு நல்லது என்ற கருத்துச் சிலரிடம் நிலவிவருகின்றது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்!**

**ப:** எங்கட அப்பையா சொல்லுகின்ற ஒரு பழமொழி உண்டு: 'சென்மபுத்தி செருப்பால் அடிச்சாலும் போகாது' என்று! இப்பழமொழி போலதான் சிலருடைய புத்தியும் அவர்களின் நடவடிக்கையும்! அவர்களை எ்லாம் கணக்கில் எடுக்காதீர்கள்.

*(அமுதா, யாழ்ப்பாணம்)*
**கே: வைத்தியத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு நீங்கள் கூறும் நல்லாலோசனை என்ன?**
**ப:** வைத்தியத் துறைசார்ந்து தொழிபுரிபவர்கள் செய்யும்பணி 'கரணம் தப்பினால் மரணம்' என்பதுபோல அமைந்துவிடுவதால் அவர்கள் தங்கள் சேவையின் தன்மையை, மேன்மையை அடிக்கடி சிந்தித்துத் தம்மை இப்பணிக்கு எப்போதும் தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

*(சசி, கொழும்பு)*
**கே: திருமணம் செய்ய உகந்த வயது எனக் கருதுகின்றீர்கள்?**

**ப:** சசி, "உயிரியல் ரீதியாக 15வயது, மத ரீதியாக 15-17வயது, சமூக ரீதியாக 26வயது, சட்ட ரீதியாக 18வதுக்கு மேல், கலாசார ரீதியாக 24-28வயது, பொருளாதார ரீதியாக 30வயதுக்கு மேல், தருக்க ரீதியாக ஒருபோதும் செய்யா-தீர்கள் என்பதே பலரின் பதில்" என எங்கே-கா ஓரிடத்தில் படித்த வரிகள்தான் உங்கள் கேள்விக்குப் பதிலாய் வருகின்றது.

*(அமலன், யாழ்ப்பாணம்)*
**கே: வெளிநாட்டில் இருந்துகொண்டு நாட்டு நடப்புக்களை எல்லாம் நன்றாக அறிந்து, தெரிந்து பதில் எழுதுகின்றீர்கள். வெளிநாடு சென்றாலும் மண்பற்றுப் போகவில்லை. காரணம்?**

**ப:** உங்கள்மீது கொண்ட அன்பினால்தான்!

*(விஜயன், மன்னார்)*
**கே: கௌரவ சி. வி. விக்னேஸ்வரன் அவர்களுக்குத் தமிழ்மக்கள், குறிப்பாக, வடமாகாண மக்கள் மிகப்பெரும் அளவில் வாக்குகளை வழங்கி அவரை வடமாகாண முதலமைச்சர் ஆக்கினர். இவரோ, அப்பதவியில் இருந்தபோது எதிர்பார்த்த வகையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறமாக இருக்கின்றது. இருப்பினும் அவர் நாடாளுமன்றத் தேர்-தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்து போட்டியிட்டபோது மீண்டும் யாழ். மக்கள் அவரை நாடாளுமன்றம் அனுப்பினர். இப்போது, தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளருக்கு அவரை இறக்கினாலென்ன என்ற கருத்து இன்னொரு பக்கமாக நிலவுகி-ன்றது. அதுபற்றி?**

**ப:** ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது, விஜயன்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: 'அன்புள்ள ஆரியசிங்க' இலங்கை, கனடா, நோர்வே, பிரான்சு, இத்தாலி, ஐக்கிய இராட்சி யம் எனப் பல நாடுகளிலும், இந்நாடுகளின் சில இடங்களிலுமென அகில உலகெங்கும் வரவேற்பைப் பெற்று வருவது மகிழ்வளிக்கின்றது. என்ன காரணம்?**

**ப:** நூலைப் படித்துக் பாருங்கள், புரியும்!

*(கண்ணன், யாழ்ப்பாணம்)*
**கே: வைத்தியசாலைகள் பற்றியும் வைத்-தியத்துறையின் அசமந்தப் போக்குகள் பற்றி அடிக்கடி விமர்சிக்கப்படுவதோடு குற்றஞ் சாட்டப்படுகின்றது! காரணம் என்னவாக இருக்குமோ?**

**ப:** பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அடிப்படையில் நிருவாகத்தில் உள்ள அசட்டை-டயீனங்களும் தவறுகளாலும்தான் அடுத்தடு-த்துப் பல விபரீதங்கள் இடம்பெறுகின்றன. ஒழுங்கையும் அதனை நடைமுறைப்படுத்-துவதற்குச் சட்டத்தையும் சரியாக, நேர்மையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்றைய மிக மோசமான நிலைமைகளுக்கு இத்துறை தள்ளப்படும் நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என் தாழ்மையான கருத்து!

# புதுக்குடியிருப்பில் புத்தாக்கக் கண்காட்சி

மாணவர்களின் செயற்பாட்டு மற்றும் புத்தாக்க திறனை மேம்படுத்தும் நோக்கோடு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட விஞ்ஞான பாட கண்காட்சி கடந்த 30ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அருட்தந்தை றொபின்சன் ஜோசப் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. பாஸ்கரன், விஞ்ஞான பாட வளவாளர் திரு. நக்கீரன், தமிழ்பாட வளவாளர் திரு. பீதாம்பரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இக்கண்காட்சியில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

# சமூக மேம்பாடு மற்றும் கல்விவள நிலைய கட்டடத் திறப்புவிழா

அமலமரித் தியாகிகள் சபையினரால் முல்லைத்தீவு ஒட்டுச்சுட்டான் பிரதேசத்-தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த "மலரும் முல்லை" சமூக மேம்பாடு மற்றும் கல்விவள நிலைய கட்டட கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டட திறப்புவிழா கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

நிலைய இ யக்குநர் அருட்தந்தை ஜீவரட்ணம் அவர்களின் ஒழுங்படுத்தலில் அமலமரித்தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. உமா மகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து புதிய கட்டடத்தை அசீர்வதித்து திறந்து வைத்தார்.

## உயிர்வதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கணினிகள் மற்றும் இயந்திரங்கள் சற்றும் முகம் சுழிக்காமல் இயங்கத் தொடங்கின. சக தொழிலாளர்கள் பலர் சமூக மளிக்க வில்லை. 'விதி' ஒரு சிலருக்கு மட்டுமே தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது.

எதிர்பார்த்ததை விட ஒருசிலராவது அதிகமாய் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சிலரது முகத்தில் ஆழ்ந்த கவலையின் ரேகைகள் படர்ந்திருந்தன. யாராவது நெருங்கிய உறவுக்காரர்களை அவர்கள் இழந்திருக்கலாம். எல்லோரும் தத்தம் பாதுகாப்பில் கவனமாய் இருந்தனர். கதவுகள் திறப்பதிலிருந்து, பணம் பரிமாறுவது வரை மிகுந்த எச்சரிக்கையாக இருந்தார்கள்.

முகக் கவசம் பெரும் இடைஞ்சலாய் இருந்தது. தவிர்த்தால் 135 யூரோ தண்டம் என அரசு வெருட்டியது. முகக் கவசம், கையுறை பலருக்கு ஒவ்வாமை என்னும் புதிய சிக்கலை உருவாக்கலாம்.

வீட்டிலிருந்து அடிக்கடி குறுஞ் செய்திகள் வந்துகொண்டிருந்தன. எனது பாதுகாப்புத் தொடர்பான அசட்டையீ-னம் அல்லது இயலாமை அவர்களை அச்சப்படுத்திக் கொண்டே இருந்தது. உடல் சோர்வாய்த்தான் இருந்தது. எவ்வளவுதான் தைரியத்தை வர-வழைத்தாலும் அது பழைய நிலைக்கு மீள முடியாது அடம்பிடித்துக்கொண்டு இருந்தது.

மதியத்திற்குப் பின்னான தெரு, உள்ளிருப்பிற்கு முன்னான காலத்தைப் போலிருந்தது. ஆனாலும், பாரிஸ் நகரின் வழமையான சுறுசுறுப்பு காணப்படவில்லை. மெத்ரோக்கள் கிட்டத்தட்ட வெறுமையாகவே ஓடிக் கொண்டிருந்தன. யாரும் நின்று பயணிப்பதைக் காண முடியவில்லை. நேற்றிலிருந்து பாதம் வேறு நோகிறது. முந்த நாள் நடைப் பயிற்சியின்போது, தேவையில்லாமல் அதிக வேகமாக நடந்தேன். வேலை தொடங்குவது தொடர்பான மனக்கிலேசம் மற்றும் சிறு சிறு பிரச்சினைகளால் மனம் உந்த, பாதங்கள் வேகம் கொண்டன.

உள்ளிருப்பு நாட்களுள் நேற்றைய ஞாயிற்றுக்கிழமை மிக மந்தமான சோர்வான நாளாக இருந்தது. வீடு வந்து சேர்ந்தேன்.எதிர்பார்த்த விடயம் தான். மஞ்சள் தண்ணீரை ஒளித்து வைத்த படி மனைவி காத்திருந்தார். எரிச்சலாக இருந்தாலும் அச்சம் காரணமாக அமைதியாகினேன். தான் இன்று பாடசலைக்குச் சென்றதையும் பாடசாலை கொரோனா ஒழுங்குமுறைகளையும் மிக உற்சாகமாக மனைவி எனக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். பேனா பிடிக்கும் முறையிலிருந்து தாளில் கைபடாது கையெழுத்து வைக்கும் நுட்பம் வரை அவை விரிவாய் இருந்தன. இவற்றைக் கடைப் பிடிப்பது கொரோனாவை விட பெரும் வதையாயிருக்கும் என்பதை உணர்ந்தேன்.


1ம் ஆண்டு நினைவு

மலர்வு 15 . 10 . 1933



உதிர்வு 15 . 08 . 2023

அமரர்

**மரியநாயகம் செல்லையா**

ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள்
எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"
(தி.பா. 27:4)

சென் யூட்
இளவாலை

குடும்பத்தினர்

AD-14

# தாத்தா பாட்டிகள் தின நிகழ்வுகள்

## பாசையூர் பங்கு



தாத்தா பாட்டிகள் தினத்தை சிறப்பிக்கும் முகமாக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து தாத்தா பாட்டிகளுக்கான கௌரவிப்பு மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுடன் அனுபவ பகிர்வும் இடம் பெற்றன.

## அச்சுவேலி பங்கு



தாத்தா பாட்டியர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக அச்சுவேலி பங்கில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் புனித சூசையப்பர், புனித அந்தோனியார் மற்றும் நவக்கிரி புனித றீற்றம்மாள் ஆலயங்களில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றன.

பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் சிறப்பு திருப்பலிகளும் திருப்பலி நிறைவில் பேரப்பிள்ளைகளால் தாத்தா பாட்டியர்களுக்கான கௌரவிப்புகளும் தொடர்ந்து ஒன்றுகூடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சேகரிக்கப்பட்ட காணிக்கைகள் கோப்பாய் புனித அன்னை திரேசா முதியோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டன.

## குளமாங்கல் பங்கு



தாத்தா பாட்டியர் தினத்தை சிறப்பித்து குளமங்கால் பங்கின் புனித சவேரியார் ஆலயம் வறுத்தலைவிளான் அற்புத குழந்தை இயேசு ஆலயம் மற்றும் நல்லிணக்கபுரம் புனித அமைதியின் அரசி ஆலயங்களில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு திருப்பலியும் நிறைவில் பேரப்பிள்ளைகளால் தாத்தா பாட்டியர்களுக்கான கௌரவிப்புக்கள் இடம்பெற்றன. அத்துடன் அன்றைய நாளை சிறப்பிகக்கும் முகமாக தாத்தா பாட்டிகளுக்கான அனுபவசுற்றுப் பயணமும் இடம் பெற்றது இந்நிகழ் வில்70 வரையான தாத்தா பாட்டியர் கலந்து மாதகல் புனித லூர்து அன்னை கெபி மற்றும் நட்புமணப்பூங்காவை தரிசித்தனர்.

## சுண்டுக்குளி பங்கு



தாத்தா பாட்டியர் தினத்தை முன்னிட்டு சுண்டுக்குளி புனித யுவானியார்ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட தாத்தா பாட்டியருக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் தொடர்ந்து தாத்தாபாட்டியர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன.

# யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்புவிழா



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட வருடாந்த பரிசளிப்பு விழா 03ஆம் சனிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியசீலி மரியதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி றொகான் அவர்கள் தலைமைதாங்கி வழிநடத்தினார்.

இந்நிகழ்வில் 2023 ஆம் கல்வி ஆண்டில் கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஒய்வுநிலை பொது முகாமயாளர் கலாநிதி அபேசுந்தர அவர்கள் பிரதம விருந்தினராகவும் பாடசாலை முன்னாள் அதிபரும் திருக்குடும்ப கன்னியர் மட மாகாண ஆலோசகர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்கள் கௌவர கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கலாமன்றத்தின் 77 வது கலைமுகம் வெளியானது




யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் "கலைமுகம்" கலைஇலக்கிய சமூக இதழின் 77வது இதழ் அண்மையில- வெளிவந்துள்ளது. கலை, இலக்கியம், நாடகம், ஓவியத்துறை சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள் கவிதைகள், நூல்மதிப்பீடுகள், பத்தி என பல்வேறு விடயங்களையும் தாங்கி இவ் இதழ் வெளிவந்துள்ளது. "கலைமுகம்" இதழ் 1990 ஆம் ஆண்டு முதல் திருமறைக் கலாமன்றத்தால் தொடர்சியாக வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத்துறை பங்கில் முதல்நன்மை திருவருட்சாதனம்



கொழும்புத்துறை புனிசெபமாலை அன்னை ஆலயத்தில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றி திப்பலியில் 07 சிறார்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

# ஆறு வருடங்களின் பின் எழுவைதீவில் உறுதிப்பூசுதல்



ஆறு வருடங்களின் பின் எழுவைதீவு பங்கில் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் 04.07.2024 அன்று யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் எழுலைதீவு மற்றும் அனலதீவைச்சேர்ந்த 50 பேருக்கு வழங்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி யூட் கெமில்டன் அடிகளார் இதனை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.


# நீங்கா நினைவுகள்

மண்ணக வாழ்வின் 75ம் வருட நிறைவு
28.07.1949

விண்ணக வாழ்வின் 3ம் மாத நினைவு
30.04.2024



அமரர் அந்தோனிப்பிள்ளை பீற்றர் (குமார்)

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகின்றேன்"

மாதங்கள் மூன்று மறைந்திடினும்
மதிமுகம் எம்மை விட்டு மறைந்திடுமோ?
உந்தன் உணர்வுகள் உறைந்ததோ?
உயிர்த் துடிப்புத்தான் ஓய்ந்ததோ? ஐயகோ
உந்தன் இதயம் ஒருமுறை துடிக்காதோ?
ஏங்கும் எங்கள் குரலைக் கொஞ்சம் கேட்காதா?

இவரின் ஆன்மா நித்தியமும், இறைவனில் இளைப்பாற வேண்டி 2024.07.26 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு பரிசுத்த கார்லே மாதா ஆலயத்திலும், 2024.07.30 செவ்வாய்கிழமை காலை 5.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும் மருதமடு அன்னை திருத்தலத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

'தாயகம்"
42/5 மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் மறாத நினைவுகளில்
உறவுகள்

# நீங்கா நினைவுகள்

58ம் வருட நிறைவின் நினைவு



அமரர்
சந்தியோ அந்தோனிப்பிள்ளை
அன்னை மடியில்
1908.12.26
ஆண்டவன் சந்நிதியில்
1966.08.15

50ம் வருட நிறைவின் நினைவு



அமரர்
அன்னம்மா அந்தோனிப்பிள்ளை
அன்னை மடியில்
1914.04.01
ஆண்டவன் சந்நிதியில்
1974.08.12

"சீவியத்தில் நேசித்த உங்கள் இருவரையும் மரணத்திலும் மறவோம்"

வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க
வரலாறாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்
இறைவனது திட்டமதை ஏற்று நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்களே!
சந்தமும் உங்கள் நினைவால் வாடுகின்றோம்
சாந்தி பெற சரிந்த மனங்களுடன்
அஞ்சலி செலுத்துகின்றோம்

அன்புடன் எமைப் பெற்று வளர்த்து பொலிவுடன் விளங்கச் செய்த பொன்னொளி மறைந்து ஆண்டுகள் 50 ஆகியதே.

இவர்களின் ஆன்மாக்கள் நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 2024.08.12ம் திகதி திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும், மருதமடு அன்னை திருத்தலத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

தாயகம்
142/5 மவுண்கார்மல் வீதி
யாழ்ப்பாணம்.

என்றும் மறவாத நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஆவணி மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.